5. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமை மீறல் பிரச்சினை, (குறுக்கீடு) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு என்றென்றும் இஸ்லாமிய மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசாக விளங்குகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்று இஸ்லாமிய மக்களுக்கு பல திட்டங்களை விதி 110–ன்கீழ் அறிவித்துள்ளார்கள். அதாவது, இமாம்களுக்கும், மோதினார்களுக்கும் ஓய்வூதியத்தை ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஹஜ் பயணம் மேற்கொள்ளும் ஹாஜிகளுக்கு ஹஜ் இல்லம் கட்டுவதற்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், உலமாக்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வாங்குவதற்காக 50 சதவீத மானியம் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்படி இஸ்லாமிய மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்களோ, அதே வழியில் இன்றைக்கு ஆட்சி புரிந்துகொண்டிருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை எடுத்துக் கூற பெருமையாக இருக்கின்றது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–50

***மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
> நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
> திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்,
> செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;"

என்ற பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாடலுக்கு இலக்கணமாகி, 'தொட்டில் குழந்தைத் திட்டம்' தந்து, அன்னை தெரசாவின் வழித் தோன்றல், 'பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்', அனைத்து மகளிர் காவல் நிலையம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக 13 அம்சத் திட்டங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் என்னும் மாபெரும் இயக்கம் கண்டு, மகளிருக்கு எங்கள் இயக்கத்தில் 33 சதவிகித இட ஒதுக்கீட்டை அமல்படுத்தி, இந்திய நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்து, இதே அவையில் 7–11–1995 அன்று விவாதிக்கப்பட்டு, இன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளும் அதே வேளையில், உள்ளாட்சி மன்றங்களில் பெண்களுக்கு 50 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கும் வழிவகுத்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்படி, பல வழிகளில் மகளிருக்கு சமூக, பொருளாதார, அரசியல் உயர்வுக்கு வழிகாட்டி, உலக மகளிர் உள்ளங்களில் உயர்ந்து நிற்கும் நம் குல தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறந்த நாளான பிப்ரவரி 24 ஆம் தேதி, மாநில பெண்கள் பாதுகாப்பு தினமாகக் கொண்டாடப்படும் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்போடு, 5 அறிவிப்புகள் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ளன. சத்துணவு தந்த சரித்திர நாயகனுக்கு நூற்றாண்டு விழா கண்டு, பாலின சமத்துவத்திற்கான நிதி ஒதுக்கீட்டு அட்டவணையின்படி Gender Budget–ல் 2020–2021 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மகளிர் நலனுக்காக 78,796 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, ஆளுமைத் திறனில் இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்ற விருது பெற்று, 3 ஆண்டுகள் சாதனைகளை நிறைவு செய்து,

2020 பிப்ரவரி 19] *[டாக்டர் வி. சரோஜா]*

(மேசையைத் தட்டும் ஒலி) நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள குடிமராமத்து நாயகன், காலம் நமக்குத் தந்த கொடை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், பண்பின் சிகரம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களையும், இந்த அவையோரையும் வணங்கி, மகிழ்கிறேன்.

6. உரிமை மீறல் பிரச்சினை

'புதிய தலைமுறை' மற்றும் 'நியூஸ் 18' தொலைக்காட்சிகள்மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவை உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், நேற்று இந்த அவையிலே, அவர் தெரிவித்த ஒரு கருத்து குறித்து 'புதிய தலைமுறை' மற்றும் 'நியூஸ் 18' தொலைக்காட்சிகள் உண்மைக்கு மாறாக செய்தி வெளியிட்டது குறித்து உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை பேரவை விதி 219–ன்கீழ் அவையில் எழுப்ப அனுமதி கோரி அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். அவருக்கு நான் அனுமதி வழங்குகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் நான்காவது தூணாக பத்திரிகைத் துறையை எங்களுடைய இயக்கமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நினைக்கின்றார்கள். அந்த வகையிலே நேற்று தி.மு.க.-வினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது. TASMAC நிறுவனத்தினுடைய வருமானம் அதிகமாகிவிட்டது என்று சொன்னார்கள். அது உங்களுடைய ஆட்சிக் காலத்திலும், விலைவாசி ஏற்றம் ஏற்படுகின்றபோது அதனுடைய வருவாய் அதிகரித்துக் கொண்டிருந்தது. உங்கள் ஆட்சியிலும் அதிகமாக இருந்தது; எங்கள் ஆட்சியிலும் அதிகமாக இருந்தது என்று சொன்னேன். அப்போது இங்கே பேசியவர்கள், குறுக்கீடாக "அதிகமாகக் குடிப்பதனால் வருமானம் அதிகமாகிவிட்டது" என்று சொன்னார்கள். நாங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றோம். அதற்காக 3 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி இருக்கின்றோம்; குறுக்கிட்டதற்கு நான் "அளவுக்கு மீறிக் குடிக்கின்றார்கள்; அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?" என்று*